மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல் சுடர்

மாசி - 1995 ❁ ''மன்று'', 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ❁



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் ''சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்'' இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

வள்ளல் அந்த கர்ணன்
வடிவம் கொண்டேன் நானும்.
கண்ணா என்று அழைப்பாய்
களைப்பை நீக்க அமர்வாய்.
நண்டு இறாலும் மீனும்,
ஒழிந்துகொள்ள நானும்,
இடங்கள் பல கொடுப்பேன்,
இதமாய்க் காத்து மகிழ்வேன்.



### ஆசிரியர் குழு

கா. நடராசா (சனசமூக அ. உ.)
நி. ஜெயராஜா (சனசமூக அ. உ.)
வி. இராமச்சந்திரா (குறுமண்வெளி சிவசக்தி வித்)
எம். இராஜேந்திரம் (தன்னாமுனை புனித வளனார் வித்)
சோ. சுந்தரமோகன் (கோல்ட்பிஸ் வி. க.)
கே. ரதிச்சந்திரிக்கா (தடாகம், சந்திவெளி)

## உள்ளடக்கம்


நீங்கள் அறியவேண்டிய விடயங்கள் 2
ஐயோ காது அடைக்குதே ... 2
கலாநிதி க. கனகராசா
ஒரே கவலை கொள்வோம் ... 3
அல்ஹிதாயா மன்சூர்
காடுகளைக் காப்போம் ... 3
செல்வன் சி. துஷ்யந்தன்
மாதுளை ... ... 4
திரு. செ. தேவதாஸ்
கண்டு பிடியுங்கள்: பரிசு உங்களுக்கே 4
விதைகளின் தேர்ச்சிக்குரிய பழங்கள் 4
மண் அரிப்பும் மண் பாதுகாப்பும் 5
செல்வன் தி. மேகராஜ்
மட்டக்களப்பு மாவட்டமும் மீன்பிடித் தொழிலும் 6
செல்வி கு. ஜசிந்தா
செய்திச் சுடர் ... 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியவைகள்

## அரிசி குற்றும் ஆலைகளினால் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்துரைகள்

1. அரிசி குற்றும் ஆலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 10,000 கிலோ கிராமை விஞ்சக் கூடாது.

2. அரிசி குற்றும் ஆலையின் தொழிற்பாடு மு. ப. 6.00 மணிக்கும் பி. ப. 6.00 மணிக்கும் இடையில் மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. ஆலை தொழிற்படும்போது ஏற்படும் ஒலி மட்டம் அதன் எல்லைகளில் 60 தெசிபல்களை (dB(A)) விஞ்சக்கூடாது.

4. அரிசி குற்றும் ஆலையில் உற்பத்தியாகும் சாம்பல் அடங்கலாக உமி, தவிடு ஆகியனவும் பிற திண்மக் கழிவுப் பொருட்களும்:

    1. ஏதாவது நீர் நிலையினுள் அல்லது நீர் மார்க்கத்துக்கு இட்டுச் செல்லும் இடத்தில் கொட்டப்படலாகாது.
    2. அவை, எந்த நேரத்திலாவது திறந்த வெளியில் எரிக்கப்படலாகாது.
    3. அவை, காற்றின் மூலம் பரப்பப்பட்டு ஏனையோருக்கு அசௌகரியத்தை உண்டு பண்ணக் கூடியவை. ஆகையால், அவை மனையிடங்களுள்ளோ எல்லைகளிலோ குவித்து வைக்கப்படலாகாது.
    4. நிலம் பரப்பும் நோக்கத்துக்குக் கழிவுப் பொருட்களை வேறு இடத்தில் கொட்டுவதானால் தொடர்புடைய உள்ளூராட்சிச் சபையின் அங்கீகாரமும் அறிவுறுத்துரைகளும் பெறப்படுதல் வேண்டும்.
    5. கழிவுப் பொருட்களை எரிப்பதற்கு உத்தேசித்தால் அதற்கு முறைப்படி வடிவமைத்த தகனப் பொறி ஒன்று பயன்படுத்தப்படுதல் வேண்டும். அப் பொறியின் புகைபோக்கியின் உயரம் ஆகக் குறைந்தது 30 அடி ஆவது இருத்தல் வேண்டும்.

5. வேலையாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு என்பன பொருட்டு தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தினதும் அதன் திருத்தங்களதும் விதிகள், ஒழுங்கு விதிகள் ஆகியன முறைப்படி செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

மத்திய சூழல் அதிகார சபை.

# ஐயோ காது அடைக்குதே!

தொகுப்பு: க. கனகராசா

ஆதாரம்: சுற்றுச் சூழல் மாத இதழ்

வெடிகளையும் மத்தாப்புக்களையும் கொளுத்துவதற்கு முன்னால் அவை பற்றி ஏதாவது எண்ணியதுண்டா? அவற்றை உருவாக்க எவ்வளவு காகிதங்களும் கொடிய மருந்துகளும் பயன்படுத்தப்படுகின்றன. வெடிச் சப்தத்தினால் பறவைகளுக்கு குலைநடுக்கம் ஏற்படுத்துகிறோம் என்பதைச் சிந்திக்கிறோமா?

காகிதம் செய்ய மரம் மூங்கில், வைக்கோல், கரும்புச் சக்கை தேவையல்லவா? மீண்டும் மீண்டும் மரங்களையும், மூங்கில்களையும் காகிதம் செய்ய அழித்தால் நம் இயற்கைக் காடுகள் என்ன ஆகும்? பட்டாசு வெடித்தால் காகிதங்கள் சுக்கு நூறாகி, தீக்கிரையாகிக் குப்பையாகின்றன. பட்டாசுகளில் பயன்படுத்தப்படும் மருந்துப் பொருட்கள் காற்று மண்டலத்தை படுமோசமாக மாசுபடுத்துகின்றன. பட்டாசு வெடித்தால், மத்தாப்பு கொளுத்தினால் மூக்கைத் துளைக்கும் நெடியோடு எவ்வளவு புகை மண்டலம். இந்த நெடி உடல் நலத்திற்குக் கேடானது. ஏனெனில், கடுமையான கந்தகச் சாம்பல் புகையே அந்த நெடிக்குக் காரணமாகும். இந்தப் பட்டாசு, மத்தாப்புப் புகை மேலும், மேலும் காற்றின் தூய்மையைக் கெடுத்து நம் உடல் நலக் கேட்டிற்கு நமக்குத் தெரியாமலேயே வழிவகுக்கின்றன. நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும், ஏழைகளுக்கும், வசதியற்றவர்களுக்கும் இனிப்பு, உடை வழங்கி மகிழுங்கள். ஆனால், பட்டாசு, மத்தாப்பு கொளுத்துவதைத் தவிர்த்துவிடுங்கள். அது எதிர்கால மனித குலத்திற்கே நன்மை தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## ஒரே கவலை கொள்வோம்!

நம்
காடுகளில்
நல்ல நான்கு
மரங்களில்லை
அதுதான்
இன்று - உன்
கவலை.

என்
கவலையும்
அதுதான்.

ஆனால்...
வெட்டி அழித்து
வியாபாரம்
நடத்தும்
உன் கவலையே - அல்ல
என் கவலை

நாட்டிற்கும்
உலகிற்கும்
நல்ல பல
நன்மைகள் தரும்
நல்ல விருட்சங்கள்
இன்றில்லாது
நீயும் உன்போன்றோரும்
அறுத்து, அழித்துவிட்டீர்களே!
என்பதுதான்
என் - கவலை.

நீ விடுகின்ற
ஒவ்வொரு மூச்சும்
இந்தச் சூழலை
நஞ்சாக்குகிறது.

நான் வாழ்ந்தால் போதும்
என்று - நீ
வாழ்வதால்
இவ் உலகே
அழிவை அடைகிறது.

இதை – நீ
உணர்ந்தால்தான்
என்,
கவலை தீரும்.

பல ஆயிரம்
மரங்களை
அறுத்து, அழித்த – நீ
ஒரு விதையானாலும்
நட்டதுண்டா - இந்த
தரணியில்;

சிந்தித்துப் பார்
சூழலை
சுத்தப்படுத்தி
சுவாசிக்க - நல்ல
வளி தரும்
இம் மரங்களை
இனி மேலும்
அழிக்காது
மன்றுவோடு சேர்ந்து
மரம் நடுவோம்
என்னோடு - வா!

மரக் கன்றுகளும்
நாற்று விதைகளும்
நாம் கேட்கும்
நேரமெல்லாம்
தந்து - உதவும்
'மன்று' என்று
ஒரு அமைப்பு
மட்டக்களப்பில்
உள்ள தென்பது
உனக்கெங்கே
தெரிந்திருக்கப் போகிறது?

தெரிந்திருந்தால்
எப்போதோ
திருந்தி - இருந்திருப்பாய்.

இப்போது
என்னோடு - வா
மரக் கன்றுகளைப் பெற்று
நட்டு வளர்த்து
மன நிறைவோடு
மூச்சு விடுவோம்.

மானிடத்து மனங்களிலே
வானிடத்து மழை தரும்
மர நடுகை
அவசியமும்
உணர்த்திடுவோம்;
அறுத்து, விற்ற
அவனா? இவன்!
என்று
ஊரே
உனை வியந்திடட்டும்
இப்போதே
என்னோடு - வந்துவிடு!

வந்து விட்டால்
என் கவலையும்
உன் கவலையும்
ஒன்றாகும்.

ஆக்கம்:

அல்ஹிதாயா மன்சூர்

### காடுகளைக் காப்போம்!

மரங்களை நாம் நட்டிடுவோம்
மனிதர்கள் நாம் காத்திடுவோம்!
மண்ணரிப்பை நாம்தடுத்திடுவோம்
மாண்புற நாம் வாழ்ந்திடுவோம்!

காடுகளை அழிக்காமல் கண்ணிமை
போல் நாம் காத்திடுவோம்!
காடுகளை நாம் அழிப்பதனால்
கால நிலை பாதிக்கும்!

காலநிலை அது பாதித்தால்
கார் மேகம் இருளாது!
கார் மேகம் இருளாட்டி
மழை எமக்கு மாந்துவிடும்!

மழை அதுவோ மாந்துவிட்டால்
பயிர் இனங்கள் அழிந்துவிடும்!
பயிர் இனங்கள் அழிவதனால்
நீர் நிலைகள் வற்றிவிடும்!

நீர் நிலைகள் வற்றுவதால்
உயிர் இனங்கள் அழிந்துவிடும்!
இவை அனைத்தும் உணர்ந்தே
நாம் காடுகளை வளர்த்திடுவோம்!

மண் வளத்தைப் பேணிடுவோம்
சூழலை நாம் காத்திடுவோம்!
மண்ணின் பெருமைகளை இன்றே
மக்களுக்கு நாம் உணர்த்திடுவோம்

ஆக்கம்:

சி. துஷ்யந்தன்,
ஆண்டு - 10,
மட்/மண்டூர் ம. வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## மாதுளை

ஆக்கம்: திரு. தேவதாஸ்

பழங்களிலே நோய் தீர்க்கும் மருந்து என நாம் நொடிப்பொழுதில் சொல்லுவது பார் போற்றும் தார் மாதுளையை.

நாட்டு வைத்தியத்தில் பெரிதும் பயன்படுகின்ற இது பல்வேறு நாடுகளிலும் காணப்பட்டபோதிலும் இந்தியாவிலேயே மிகவும் சிறந்த முறையில் பயிரிடப்படுகின்றது.

நிலம்:

இருவாட்டி மண்ணும், வெப்பம் அதிகமான சூழலுமே இதன் பயிர்ச்செய்கைக்கு விரும்பத்தக்கது.

இனம்:

தார் மாதுளை (இது மஞ்சள், வெள்ளைப் பழம்) கொட்டை மாதுளை (சிவப்புப் பழம்)

நடுகை:

1. விதைக் கன்று
2. துண்டங்கள்

விதைகளில் இருந்து நாற்றுகளைப் பெற்று அவற்றைத் தோட்டத்தில் நடலாம் அல்லது துண்டங்களை பதிய வைத்தல் மூலம் புதிய மகட்தாவரங்களை உருவாக்க முடியும். அவற்றைத் தோட்டத்தில் நடலாம்.

பசளை:

கூட்டெரு, மாட்டெரு போன்ற சேதனப் பசளைகளே விரும்பத்தக்கதாகும். பிரயோகத்திலும் இப் பயிர்ச்செய்கை கூடிய விளைவைத் தரும்.

பூச்சி:

பூச்சிகள், புழுக்கள் எனப் பெருந்தாக்கம் இல்லையாயினும், பழுக்கும் காலங்களில் அணில் தொல்லையைக் கட்டுப்படுத்த அதிக சிரமமாகவே இருக்கும்.

விளைவு:

நட்டு ஆறு மாதங்களில் விளைவைப் பெறக் கூடியதாக இருப்பினும் இரண்டரை ($2\frac{1}{2}$) வருடத்தின் பின்னரே நல்ல விளைவைப் பெறலாம். ஒவ்வொரு வருடத்திலும் இரு தடவைகளில் விளைச்சலைத் தரும். ஒவ்வொரு தடவையும் 15 — 20 பழங்களைப் பெறலாம். இது 25 — 30 வருடங்களுக்கு விளைச்சலைத் தரக்கூடியது.

பயன்:

ஐந்தில் மூன்று பங்கு மாதுளம்பூச் சாற்றையும், இரண்டு பங்கு பசு நெய்யையும் சேர்த்துக் காய்ச்சி மூன்று வேளையும், இரண்டு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வர சயரோகம், மூலநோய் என்பன விரைவில் நீங்கிவிடும் எனவும், இரத்த வாந்தி, வயிற்றுக் கடுப்பு, இரத்தவிருத்தி, இரத்தச் சுத்தி போன்ற நோய்களையும் மாதுளம் பூ நீக்கி வைப்பதோடு இதன் ஏனைய பகுதிகளும் பல்வேறு நோய்களைத் தடைசெய்யும் திறன் வாய்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்டு பிடியுங்கள் பரிசு உங்களுக்கே

1. பட்டாசு வெடிக்கும்போது நெடியோடு கூடிய புகை எழும்புகிறது. இதற்குக் காரணம் என்ன?
2. வளிமண்டலத்தில் கூடுதலாகக் காணப்படும் வாயு எது?
3. ஆவி உயிர்ப்பென்றால் என்ன?
4. மின்னல் தாக்கத்தினால் மண்மீது பதிக்கப்படும் மூலகமெது?
5. பிளேக் கிருமியைக் கண்டுபிடித்தவர் யார்?
6. எயிட்ஸ் விழிப்புணர்வுத் தினமெது?
7. சிலின் பீடைக் கொல்லியில் காணப்படும் அதி நச்சுத் தன்மையுடைய பதார்த்தம் எது?
8. மண்ணரிப்பைத் தடுக்க இரண்டு வழிகள் தருக?
9. புவியோட்டில் இரும்பு எவ்வீதத்தில் காணப்படுகின்றது?
10. உலக சுகாதார தினம் எப்போது கொண்டாடப்படும்?

(முடிவுத் திகதி : 31-3-95)

## விதைகளின் தேர்ச்சிக்குரிய பழங்கள்

நன்றாய்க் கனிந்து பழுக்காத பழங்களின் விதைகளும், முற்றிப் பழுத்து; அழுகின பழங்களின் விதைகளும் பயிர்ச்செய்கையில் பயன் அளிக்க மாட்டா. செடிகளில் பழுக்காமல் பறித்துப் பழுத்த பழ விதைகளும் பெரும் பயன் தரமாட்டா. தோட்டத்தில் உள்ள சிறந்த பழங்களை அவதானித்து பக்குவமாய்ப் பாதுகாத்து பழுக்க வைத்து விதை சேகரிக்க வேண்டும்.

ஆதாரம்; கமநலம் 1986 மார்கழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் சுடர்

மாவட்ட மட்டக் கட்டுரைப் போட்டியில் ஆண்டு 12-13ல் நான்காம் இடத்தைப் பெற்ற கட்டுரை

பெயர்: செல்வன் திருச்செல்வம் மேகராஜ் பாடசாலை: மட்/குறுமண்வெளி சிவசக்தி வித். ஆண்டு 12 கலை

## மண் அரிப்பும் மண் பாதுகாப்பும்
## (Soil Erosion and Soil Concervation)

மண் அரிப்பு மூலம் மண்ணானது ஓர் இடத்திலிருந்து இன்னும் ஓர் இடத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதை நிறுத்தலே மண் பாதுகாப்பு ஆகும். இதில் தரைத் தோற்றத்திற்கேற்ப பல முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் மண்ணரிப்பினால் சூழல் மாசடைதலை தடுத்து சூழலைப் பாதுகாக்கலாம். பொதுவாக மண் உருவாகும் வீதம் (Rate of soil formation) 2.5 க. மி./30 வருடம். அதேவேளை மண் அரிப்பு வீதம் (Rate of soil erosion) இதிலும் அதிகரிக்கும்போது மண்ணின் தடிப்பு குறைகிறது. இந்த நிலையில் மண் பாதுகாப்பு அவசியம் தேவைப் படுகிறது.

அரிப்புக் காரணிகளான (Erosive Agents) நீர், காற்று, வெப்பநிலை வித்தியாசம், உயிரியல் காரணிகள் போன்றவற்றின் தாக்கத்தினால் மண்ணானது ஓர் இடத்திலிருந்து பிரிக்கப்பட்டு (Detachment), கடத்தப்பட்டு (Transportation), அடையும் (Deposition) நிகழ்ச்சியே மண் அரிப்பாகும். (Soil Erosion). மண் அரிப்பின்போது ஏற்படும் சில தீமைகளாவன. மண்ணின் ஆழம் (Soil depth) குறைவடைந்து பயிர்ச் செய்கைக்குத் தேவையான நில அளவு (Land area) குறைவடைதல், வளமான மேல் மண் (Top soil) எடுத்துச் செல்லப்படுதல், மண்ணால் ஆன கட்டுகள் (Earth made structers) உடைக்கப்படுதல், உபயோகமான நிலத்தில் பள்ளங்களும், மேடுகளும் தோற்றுவிக்கப்படுதல் போன்றனவாகும். அரிப்புக் காரணிகளுள் நீரினால் ஏற்படும் அரிப்பே (Water erasion) முக்கியமானதாகும். மழை வீழ்ச்சி (Rain fall), நீர் ஓட்டம் (Run off) என்பவற்றின் அளவு, தன்மை என்பன மாறும்போது மண்ணரிப்பின் வீதமும் மாறுகிறது. மழை வீழ்ச்சியின் போது மண் துணிக்கைகள் பிரிக்கப்பட்டு நீர் ஓட்டத்தினால் கடத்தப்பட்டுப் படிகின்றது. காற்றினால் ஏற்படும் அரிப்பின்போது (Wind erosion) குளிர் வலயங்களிலும், வெப்ப வலயங்களிலும் பெரிதாகப் பாதிப்பு ஏற்படாது ஆனால், பாலைவனங்களில் பாரிய தாக்கம் ஏற்படும். வெப்ப நிலையினாலும் உயிரியல் காரணிகளினாலும் பெரிதாக மண் அரிப்பு ஏற்படுவதில்லை.

மண்ணரிப்பின் சில வகைகளை எடுத்துநோக்குமிடத்து இயற்கை அரிப்பு (Geological of Natural erosion) இது மனிதனின் தலையீடு இன்றி நடைபெறும். தூண்டுதல் அரிப்பு (Accelerated erosion) இது மனிதனின் தலையீட்டினால் ஏற்படும், ஈர்ப்பாலான அரிப்பு (Gravity erosion) இது கூடுதலாக சரிவான பகுதிகளிலேயே ஏற்படுகிறது. மண் ஈரலிப்படையும்போது மண் இளக்கமடைந்து சரிவு ஏற்படுகிறது. இது பெரும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும், ஊடல் அரிப்பு (Internal erosion) இது மண்ணினுள்ளே ஏற்படுகிறது.

நீர் அரிப்பில் பல அமைப்புகள் உள்ளன. அவையாவன், படை அரிப்பின்போது (Sheet erosion) மேல்மண் படையாக அரிக்கப்பட்டுச் செல்லுதல், துளை அரிப்பின்போது (Rill erosion) சிறிய கால்வாய்களில் நீர் ஓட்டத்தினால் மண் அரிக்கப்படுகிறது. களி அரிப்பின்போது (Gully erosion) பெரிய கால்வாய்களின் ஊடாக நீர் செல்லும்போது அரிக்கப்படுகிறது.

மண்ணரிப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலமே மண்ணைப் பாதுகாத்து சூழல் மாசடைதலையும் தடுக்கலாம். பொதுவாக சில மண் பாதுகாப்பு முறைகள் பின்வருவனவாகும். மண்ணின் பௌதிக காரணிகளைப் பேணுதல் (Physical factors) இவை மூன்று வகைப்படும். மண்ணின் இரசாயன அமைப்புகள் (Chemical properties of soil) மண்ணின் பௌதிக அமைப்புகள் (Physical properties of soil) மண்ணின் உருவமைப்பு (Texture of soil) என்பனவாகும். மணலையும், இல்றையும் (Sand and Silt) கொண்ட மண் இலகுவாக அரித்துச் செல்லப்படும். களியைக் (Clay) கூடுதலாகக் கொண்ட மண்ணை அரிப்பது கஷ்டமாகும். இதற்குக் காரணம் மணலானது களியை விட இலகுவாக, குறைந்த சக்தியுடன் வேறாக்கப் படக் கூடியதாகும். எனவே மண்ணின் அமைப்பைத் திருத்திக் களித்தன்மையாக அல்லது கெட்டியாகப் பேணுவதன் மூலம் மண்ணரிப்பைக் குறைக்கலாம்.

பராமரிப்புக் காரணிகளை (Managemental factors) இரண்டாகப் பிரிக்கலாம். அவையாவன: நிலப்பராமரிப்பு (Land management), பயிர்ப் பராமரிப்பு (Crop management) என்பனவாகும். இவற்றில் நிலப்பராமரிப்பை நோக்குமிடத்து மண் அரிப்பானது நிலத்தில் எவ்வகையான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதி

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வுச் சுடர்

## மட்டக்களப்பு மாவட்டமும் மீன்பிடித் தொழிலும்

செல்வி கு. ஜசிந்தா



மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. இம் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு ஏறக்குறைய 2632.7 ச. கி. மீற்றராகும். இதில் 168.3 ச. கி. மீற்றர் நீர்ப்பரப்பாகும். இதன் வட எல்லை திருகோணமலை மாவட்டத்தையும், வெருகல் ஆற்றையும் கொண்டது. வட மேற்கும், மேற்கின் ஒரு பகுதியும் அம்பாறை மாவட்டத்தையும், கிழக்கு வங்காள விரிகுடாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளன.

மட்டக்களப்பு ஏரி, மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே 73.6 கி. மீ. வெருகல் வரையும், தெற்கே 32.6 கி. மீ. துறைநீலாவணை வரையுமுள்ளது. இந்த ஏரி மாவட்டத்தை இரு பகுதிகளாகப் பிரித்துள்ளது. கிழக்குக் கடலோரப் பகுதி பிரதான குடியிருப்புப் பகுதியாகும். மேற்கின் பெரும் பகுதி வயல் நிலங்களாக அமைந்துள்ளது. இம் மாவட்டம் நாட்டின் மொத்தப் பரப்பளவில் 3.8 வீதத்தினையும், நாட்டின் சனத்தொகையில் 2.2 வீதத்தினையும் வகிக்கின்றது.

மாவட்டத்தின் பொருளாதாரம் பிரதானமாக விவசாயத்திலும், மீன்பிடித் தொழிலிலும் தங்கியுள்ளது. மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் (படுவான்கரை) பாரிய விவசாய நடவடிக்கைகளும், கிழக்குப் பகுதியில் (எழுவான்கரை) மீன்பிடி நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன.

ஏரியிலும், கரையோரத்திலும், ஆழ்கடலிலும் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மட்டக்களப்பு ஏரியின் பரப்பளவு 76 ச. கி. மீற்றர் ஆகும். ஏரியில் மீன்கள், நண்டு, இறால் என்பவற்றையும் பிடிக்கின்றனர். 1978 சூறாவளியினால் மீன்பிடித் தொழில் மிகவும் பின்னடைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இனக் கலவரம் நிலைமையை மேலும் மோசமடையச் செய்துள்ளது. பழமை வாய்ந்த மீன்பிடி முறைகளே தற்பொழுதும் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் மாவட்டத்தின் கரையோரச் சூழல் 1303 ஹெக். சதுப்பு நிலப் பற்றைக் காடுகளையும், 2196 ஹெக். சதுப்பு உவர் நீர்ப்பு பகுதிகளையும், 1489 ஹெக். கடற் கரைகளையும், திட்டுக்களையும், 136,822 ஹெக். ஏரிகளையும், கழிமுகங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவையே அபிவிருத்திக்குரிய பாரிய நீர் வளங்களாகும்.

வாவியில் மீன்பிடித்தலை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு பொதுவான வேலையாக அதிகமானோர் மேற்கொள்கின்றனர். சிலர் அவர்களுடைய முக்கியமான ஜீவனோபாயத்தை வாவி மீன் பிடித்தல் மூலம் மேற்கொள்கின்றனர் இறால், நண்டு, சிங்கி இறால், கயல், சுறா போன்ற மீன்களும் அந்நிய செலாவணியைப் பெற்றுக் கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன. சுறா, கலவா, ஒட்டி, ஓரா போன்ற மீனினங்களும், கூனியும் பொருளாதார இலாபத்தை அடையக்கூடியவையாக இருக்கின்றன. எப்படியிருந்தாலும் துரதிர்ஷ்டமாக நாட்டின் சூழ்நிலை காரணமாக உள்ளூர் தேவைகளைக்கூட நிறைவுசெய்ய முடியாமல் இருக்கின்றது. ஏறத்தாழ 7288 மீனவர்கள் வாவியில் மீன் பிடித்தலை மேற்கொள்கின்றார்கள்.

இறால் உற்பத்தி உவர் நீரிலும் (Brackish Water) முக்கியமாக வாவியின் எல்லாப் பகுதிகளிலும் உற்பத்தியாகின்றது. மட்டக்களப்பு வாவி இறால் உற்பத்திக்கு முக்கிய இடமாக இருக்கின்றது. இறால் உற்பத்தியில் மட்டக்களப்பு, கல்லடி, புதுக்குடியிருப்பு, அமிர்தகழி, காத்தான்குடி, ஆரையம்பதி, வாழைச்சேனை, பனிச்சங்கேணி என்பனவற்றை மிக முக்கிய இடங்களாக கொள்ள முடியும். 1985 ஆம் ஆண்டுக்கு முன் நல்ல நிலையில் இருந்த இறால் உற்பத்தி, 1985ற்குப் பின் நாட்டின் சூழ்நிலை காரணமாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

மட்டக்களப்பில் மீன் உற்பத்தியாகின்ற முக்கியமான இடங்களில் நண்டும் இருக்கின்றது. மிகவும் விருப்பத்திற்குரிய உணவுப் பண்டமாக நண்டினை நுகர்வோர் கருதுகின்றனர். மட்டக்களப்பு நண்டுக்கு பிரசித்தி பெற்ற ஊராகும். நண்டு உற்பத்தி பொருளாதாரத்தில் சரியான இலாபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரக்கூடியது. பனிச்சங்கேணி மிகவும் உச்ச நண்டு உற்பத்தியுள்ள இடமாகக் கருதப்படுகின்றது. காரணம், நண்டு உற்பத்திக்கேற்ற சாதகமான நிலையை நீர் கொண்டிருக்கிறது. 1985ஆம் ஆண்டுக்குப் பின் நண்டு உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது.

எனவே, மீண்டும் பழைய நிலைமையை அதாவது வாவி உயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஏற்ற சூழலை நாம் அமைக்க வேண்டும். கண்டல் தாவரங்களை அழிப்பதைத் தடுத்தல், மீன் நடுகை செய்தல், தகாத மீன்பிடி முறைகளைக் கைவிடல், கிருமிநாசினிகள் வாவியுடன் சேர்வதைத் தடுத்தல் போன்றவற்றையும் நாட்டின் சூழ்நிலை மாற்றத்தையும் மேற்கொண்டால் அதிக உற்பத்தியைப் பெறமுடியும்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

## மண் அரிப்பும்...

வேயே தங்கியுள்ளது. நிலத்தில் வைக்கோல், தாவரக் கழிவுகள் போன்றவற்றை இடுவதன் மூலமும் சரிவான நிலங்களின் சரிவுக்குக் குறுக்கான (Contour) முறையில் தாவரங்களை நடுவதன் மூலமும், புல் தரைகளைப் பேணி வளர்ப்பதன் மூலமும் மண்ணரிப்பைக் குறைக்கலாம். பயிர்ப்பராமரிப்பை நோக்குமிடத்து நிலத்தில் பல வகையான படரும் தாவரங்களை நடுவதன் மூலம் மழை வீழ்ச்சியின் தாக்கத்தையும் நீரோட்டத்தின் வேகத்தையும் குறைக்கலாம். அத்துடன், மண்ணானது தாவர வேர்களினால் கெட்டியாக்கப்படுகிறது. எனவே, மண்ணரிப்பு வீதம் குறைவடைகிறது. தாவரங்களின் அடர்த்தி கூடக்கூட மண்ணரிப்பு குறைவடையும் வீதமும்கூடும். நல்ல சேர்க்கை அமைப்பு மூலம் (Good forming) மண்ணரிப்பைக் கட்டுப்படுத்தலாம். சேர்க்கை அமைப்பு என்பது கூடிய பலனைப் பெறும் வகையில் குறிப்பிட்ட மண்ணரிப்பு கட்டுப்பாட்டு சேர்க்கை அமைப்புக்களை தோற்றுவித்தலாகும். பயிர்கள் மழைக் காலம் தொடங்கும்போது பயிரிடப்பட வேண்டும். அத்துடன், முதலாவது பயிர் அறுவடை செய்யு முன் அடுத்த பயிரைப் பயிரிட வேண்டும் இதனால் மழைக்காலம் (Rainy season) முழுவதுமாகவும் தாவரப் படையை (Crop cover) நிலத்தில் பேணலாம். இதன் மூலம் நீரோட்டத்தைக் குறைத்து மண்ணரிப்பைக் குறைக்கலாம். தாவர சுழற்சி (Crop Rotation) செய்வதன் மூலமும் மண்ணரிப்பைக் கூடிய அளவு குறைக்கலாம். இதன்போது மண்ணின் வளம் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கிறது. தாவரங்களின் நோய்ப் பீடைகள் கட்டுப்படுத்தப்படுகிறது. மண்ணினுள் தாவர வேரின் வேறுபட்ட நீளப் பரப்பு அளவுகளினால் போசணைப் பொருட்களின் உபயோகம் அதிகரிப்பதுடன் மண்ணைக் கூடிய காலத்திற்குக் கெட்டியாக வைத்துக் கொள்கிறது. பயிர்களை வரிசையில் நடுவதை விடப் பரவி (Spread) நடுவதனால் நீரோட்டத்தின் வேகத்தைக் குறைத்து மண்ணரிப்பைக் குறைக்கலாம்.

தரைத்தோற்றக் காரணிகளை (Topographic factors) நோக்குமிடத்து சரிவான (Slopy), குவிவான (Convex) நிலம் மட்டமான தரையிலும் பார்க்கக் கூடுதலாக மண்ணரிப்புக்குள்ளாகும். சரிவின் நீளம் கூடக்கூட மழைத்துளியும் மோதுதல் (Splash action) கூடி நீரோட்டமும் வேகமாகும். இதனால், மண்ணரிப்பும் கூடுதலாக நடைபெறும். எனவே, சரிவான மலைப் பிரதேசங்களில் சரிவின் நீளத்தைக் குறைப்பதன் மூலமே மண்ணரிப்பைக் குறைக்கலாம். அதற்குப் பின்வரும் முறைகள் கையாளப்படுகின்றன. அவையாவன, பொறி முறைத் தடுப்பு வேலைகள் (Machanical Protection Work) இவை கூடிய செலவானதாகவும், மண் வேலைகள் அதிகம் நிறைந்தனவாகவும் இருப்பினும் மண்ணரிப்பை நன்கு குறைக்கின்றது. உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். ஸ்ரொம் நீர்த் திருப்புக் கால்வாயில் (Storm Water Deversion drain) சரிவுக்குக் குறுக்காகக் கால்வாய்களும் கட்டுகளும் (Storm water drain, Channel terrace) மாறிமாறி அமைக்கப்படுகின்றன. அதேவேளை சரிவின் வழியே பிரதான கால்வாய் (Leader drain) அமைக்கப்பட்டு மேலதிக நீர் வழிந்தோட விடப்படும். கால்வாய்க்கட்டில் பலவகையுண்டு. அவையாவன: மங்கம் ரெரேஸ் Mangam terrace), நிக்கல்சன் ரெரேஸ் (Nicholsion terrace), வெஞ்ச ரெரேஸ் (Bench terrace) என்பன முக்கியமாகும்) வெஞ்ச் ரெரேஸில் பல வகையுண்டு. அவையாவன; லெவல் பெஞ்ச் (Level Bench), ஔட் வோட் ஸ்லோப்பிங் (Out ward sloping), ரிவர்ஸ் ஸ்லோப்பிங் (Reverse sloping), ஸ்டெப் ஸ்லோப்பிங் (Stop sloping) இரிகேசன் ரெரரஸ் (Irrigation terrace) காற்றினால் பாதிக்கப்படக்கூடிய கடற்கரை போன்ற வெளியான பிரதேசங்களில் சவுக்கு (Casuarina) போன்ற காற்றின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்கக்கூடிய மரங்கள் நடப்படும். இவை காற்றுத் தடை (Wind break) எனப்படும். இதன் மூலம் காற்றின் வேகத்தைக் குறைத்து காற்றினால் ஏற்படும் மண்ணரிப்பைக் குறைக்கலாம். கடல் அலைகளினால் ஏற்படும் அரிப்பைத் தடுக்கக் கரைகளில் கற்கள் கொட்டி கட்டு கட்டப்படுகிறது.

மண்ணரிப்பானது சூழல் மாசடைதலின் முக்கியமானதொரு அங்கமாக இருக்கின்றபோதிலும் தகுந்த மண் பாதுகாப்பு முறைகளைப் பொருத்தமான நேரத்தில் உபயோகிப்பதன் மூலம் மண்ணரிப்பைக் கூடியளவு கட்டுப்படுத்தி சூழலைப் பாதுகாக்கலாம். தொடர்ச்சியாகப் பல மண் பாதுகாப்பு முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுக் கொண்டு வருவதால் காலப்போக்கில் மண்ணரிப்பை முற்றாகக் கட்டுப்படுத்தக் கூடியதொரு ஸ்திர நிலையை நாங்கள் அடையமுடியும் என எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

1) 11-1-95 கன்னன்குடா தேசிய இளைஞர் கழக உறுப்பினர்கள் அக் கிராமத்தில் மர நடுகையும், கருத்தரங்கும் நடாத்தினர்.

2) 16-1-95 தேற்றாத்தீவு ஸ்ரீ பால முருகன் ஆலயத்தில் மரநடுகை மேற்கொள்ளப்பட்டது.

3) 21-1-95 சூழல் மன்றம் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

4) 23-1-95 மாவட்ட சூழல் சட்ட அமுலாக்கல் குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

5) 26-1-95 வன பரிபாலன திணைக்களத்தினால் கண்ணாக் காடுகள் சம்பந்தமான கருத்தரங்கு நடைபெற்றது.

6) 26-1-95 தேவாபுரத்தில் விழிப்பூட்டல் நிகழ்ச்சி நடைபெற்றது.

7) 28-1-95 பாலமீன்மடு சூழல் பாதுகாப்பு விழிப்புக் குழு காலை 9 மணிக்கு மட்/பாலமீன்மடு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் கருத்தரங்கு நடாத்தினர்.

8) 17-2-95 அக்கரைப்பற்று மகாசக்தி சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தினருக்கான சூழல் பற்றிய பயிற்சி வகுப்பு நடாத்தப்படும்.

9) 25-2-95 சூழல் மன்றத்தின் இரண்டாவது கூட்டம் எமது கேட்போர் கூடத்தில் நடாத்தப்படும். ஆர்வமுள்ளோர் சகலரும் வரவேற்கப்படுகின்றீர்கள்.

10) வவுணதீவு இளைஞர் கழக உறுப்பினர்கள் மரக்கன்றுகளை கிராம மக்களுக்கு விநியோகிக்கவுள்ளனர்.

11) 1994ஆம் ஆண்டுத் திட்டத்தின்படி உருவாக்கிய 10,000 கண்டல் மரக்கன்றுகள் எம்மிடம் உள்ளன. இதனை நட்டுப் பயனடைய விரும்பிய மீனவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

"மன்று"
16, புனித மிக்கேல் வீதி.
மட்டக்களப்பு.
இலங்கை.

IN24. MR. K. SANMUGAM
TEACHER
NADUVIL THAMBI VEETHY
VANTHARUMOOLAI.

இப்பிரசுரம், மட்டக்களப்பு ஜெஸ்கொம் அச்சகத்தில் அச்சிட்டு,
'மன்று' இணைப்பாளர் ... ... ... ...னால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org